# IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE,

# FAST TRACK COURT, ARANI.

## S.C.No.95/2022

| | | |
|---|---|---|
| **Deposition of Witness for** | **:** | **P.W.18** |
| **Name** | **:** | **திரு. ரமேஷ்** |
| **Father's Name** | **:** | |
| **Village** | **:** | |
| **Taluk** | **:** | |
| **Caste** | **:** | |
| **Calling** | **:** | |
| **Religion** | **:** | |
| **Age** | **:** | |

**எதிரி ஆஜர்.**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 08.12.2023.**

**முதல் விசாரணை -**

**நான் விளை கிராமத்தில் குடியிருக்கிறேன். தண்ணீர் லாரி ஓட்டி வருகிறேன். இறந்துபோன புருஷோத்தமன் என்னுடைய அண்ணன். ராஜசேகர் என்னுடைய தம்பி. புருஷோத்தமன் இறந்தது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்களா என்றால் கையொப்பம் கேட்டார்கள். சம்பவம் நடந்து இரண்டு நாட்கள் கழித்து போலிசார் கையொப்பம் கேட்டார்கள். போட்டேன்.**

சம்பவம் எப்போது நடந்தது என்றால் தேதி, மாதம் ஞாபகம் இல்லை 2021ம் வருடம். அப்போது நான் சென்னையில் இருந்தேன். மெத்தை மீது இருந்து புருஷோத்தமன் காலி மனையில் விழுந்துவிட்டார் என்று என்னுடைய மனைவி எனக்கு போன் செய்தார். நான் வந்து புருஷோத்தமனை பார்த்தேன். நான் பார்க்கும்போது புருஷோத்தமன் எப்படி இருந்தார் என்றால் கால் எல்லாம் அடிப்பட்டு இருந்தது. மார்பு பகுதியில் சதையில் தடுப்பு தடுப்பாக இருந்தது. நான் கேட்டதற்கு மேலிருந்து போதையில் தண்ணீர் காய வைக்கும் அடுப்பில் விழுந்து விட்டதாக சொன்னார்கள். விழுந்த இடம் காலி மனை என்றால் சரி தான்.

சாட்சி விசாரணை வாக்குமூலத்திற்கு பகுதிக்கு எதிராக சாட்சியம் அளித்ததால் சாட்சியை பகுதி குறுக்கு விசாரணை செய்ய கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் அனுமதி கேட்டு அனுமதி வழங்கப்படுகிறது.

அரசு தரப்பு பகுதி குறுக்கு விசாரணை

எங்கள் குடும்பத்திற்கு மாடு எதுவும் இல்லை. அதனால் தண்ணீர் காய வைக்கவேண்டிய அவசியம் இல்லை என்றால் குளிப்பதற்காக காய வைக்கவேண்டும். குளிப்பதற்காக தண்ணீர் தான் காலையில் தான் காய வைப்பார்கள் என்றால் சில நேரங்களில் இரவிலும் காய வைப்பதுண்டு. அன்றைய தினம் யார் அடுப்பை பற்ற வைத்தது என்றால் என்னுடைய மனைவி பற்ற வைத்தார்.

நான் அன்றைய தினம் அடுப்பை பார்த்தேனா என்றால் சொல்லி தான் தெரியும். அடுப்பு இருந்தது, நெருப்பு இருந்தது எல்லாம் என் தம்பியை காப்பாற்றவேண்டி சொல்லப்படுபவை என்றால் சரியல்ல. வீட்டிற்கு வேண்டிய அடுப்பு அங்கு இருக்கவேண்டிய அவசியம் இல்லை என்றாலும், காலி

**மனையில் பற்ற வைக்கவேண்டிய அவசியம் ஏற்படாது என்றாலும் சரியல்ல.**

**அப்படியொரு வகையில் நான் சொல்வது போல் அடுப்பும் நெருப்பும் இருந்திருந்தால் போலிசார் விசாரிக்கும்போதே அது குறித்து சொல்லியிருப்பேன் என்றால் கேட்டிருந்தால் சொல்லியிருப்பேன். போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றாலும், விசாரணை செய்தபோது வாக்குமூலத்தில் உள்ளவாறு வாக்குமூலம் அளித்துவிட்டு, தற்போது எதிரி என்னுடைய தம்பி என்பதால் அவரை காப்பாற்றவேண்டி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

**எங்கள் குடும்ப சொத்து வீடு மட்டும் தான். என் தகப்பனார் பெயர் வெள்ளை. அவர் இறந்துவிட்டார். 21.12.2020 அன்று என்னுடைய தகப்பனார் எங்கள் குடும்ப சொத்தான வீட்டை எனக்கும், என்னுடைய தம்பி ராஜசேகர் பெயரிலும் தான செட்டில்மெண்ட் எழுதி வைத்துவிட்டார் என்றால் சரி தான். ஆரணி சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரி தான். புருஷோத்தமனுக்கு தொகையாக கொடுத்துவிட்டார்.**

**என் மனைவி என்னுடைய அண்ணன் தவறி கீழே காலி மனையில் அடுப்பின் மீது விழுந்து காயம்பட்டதை பற்றி போன் மூலம் கூறியபிறகு காலை 11 மணி அளவில் என்னுடைய வீட்டிற்கு வந்தேன் என்றால் சரி தான். நான் வந்து அரைமணி நேரம் கழித்து சென்னையில் இருந்து ராஜசேகர் வீட்டிற்கு வந்தாரா என்றால் இரண்டு மணி நேரம் கழித்து வந்தார். ராஜசேகர் வந்தபிறகு நான், என்னுடைய அப்பா வெள்ளை, ராஜசேகர் ஆகியோர் காவல்நிலையத்திற்கு சென்றோம் என்றால் சரி தான்.**

புருஷோத்தமன் குடித்துவிட்டு ஊரில் தகராறு செய்வதில் 8 வருடத்திற்கு முன்பு அவர் மனைவி அவரை விட்டு சென்றுவிட்டார் என்றால் சரி தான். அவர் மனைவி சென்ற பிறகு எங்களுடன் தான் கூட்டு குடும்பமாக இருந்தார் என்றால் சரி தான். ஆனால் குடிப்பார்.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd./ K. Vijaya,
Additional Sessions Judge,
Arani.